வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | fpwp];jt ehfhpfk; | Gs;spj;jpl;lk |
|---|---|---|

### பகுதி – I

| | |
|---|---|
| 1. 1 | 11. 2 |
| 2. 3 | 12. 2 |
| 3. 2 | 13. 4 |
| 4. 5 | 14. 1 |
| 5. 3 | 15. 5 |
| 6. 1 | 16. 3 |
| 7. 5 | 17. 2 |
| 8. 2 | 18. 3 |
| 9. 1 | 19. 4 |
| 10. 3 | 20. 5 |

[50X1=50 புள்ளிகள்]

### பகுதி – II
**(அ)**

*1)*

i.

- நீதி நிர்வாக முறை
- நாணயங்களின் பயன்பாடு
- ஓர் இறைக் கொள்கை
- தீய ஆவியை விரட்டுதல்
- பல் சமயப் பின்னணியில் வாழ்ந்த மக்கள்

agaram.lk

ii.

- அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞான கண்டுபிடிப்புக்களுக்கும் வித்திட்டது.
- கிரேக்கர்கள் விவசாயத்தையும் கடல் வழி வர்த்தகத்தையுமே முக்கிய தொழிலாக கொண்டிருந்தனர்.
- சாஸ்திரம், புவியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், விளையாட்டு, இராணுவப் பயிற்சி போன்ற துறைகளுக்கும் வித்திட்டனர்.
- பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களைப் பரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை இவர்களின் பெரும் பங்காகும்.
- கிரேக்க அறிஞர்களின் பல்துறைகள் பங்களிப்புக்களாக மெய்யியல், தர்க்கம், வானியல், கேத்திர கணிதம் போன்ற துறைகள் வழியாக தத்துவ ஞானம் எனும் அறிவியல் துறைக்கு வித்திட்டனர்.

iii. நொஸ்திக்கம்
பிளேற்றோனிசம்
ஸ்தோயிக்கம்
நொஸ்திக்கம்

- இது ஞான உணர்வுக் கொள்கை இதனை முன்வைத்தவர்கள் ஞானமார்க்கத்தினர் ஆவார்.
- இவ்வுலகம் ஆவி உலகு, சடப்பொருள் உலகு என இரு பிரிவாககக் காணப்படுகின்றது. ஆவி உலகு நல்லது சடப்பொருள் உலகு தீயது எனக் கூறுகிறது.
- இறைவன் சடப்பொருள் உலகாகப் படைக்கவில்லை அவரிடம் இருந்து பிரிந்து சென்ற ஒரு சக்தியே தீயதாக மாறி சடப்பொருள் உலகைப் படைத்தது.

பிளேற்றோனிசம்

- இது கிரேக்க தத்துவ ஞானி பிளேற்றோ என்பவரால் முன் வைக்கப்பட்டது.
- உண்மை உலகு, சாயல் உலகு என இரண்டு உலகுகள் உள்ளன.
- இவ்வுலகில் நாம் காண்பவை எல்லாம் உண்மை உலகின் சாயல்களே, இதைப் பிளேற்றோ சடப்பொருள் உலகு என அழைக்கிறார்.

ஸ்தோயிக்கம்

- இம் மரபினைத் தோற்றுவித்தவர் சீனோ என்பவராவர்
- இவரது கருத்துப்படி எச்சூழ் நிலையிலுமுள்ள சமநிலையுடன் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்கும் தன்மையே ஸ்தோயிக்க மனபோக்காகும்.
- எல்லா நிகழ்வுகளும் "விதி" என்னும் நியதினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

iv.

- இலத்தீன் மொழி உரோமையருடைய ஆட்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் விளங்கியது. பல ஐரோப்பிய மொழிகளுக்கு இலத்தீன் மொழியே தாய் மொழியாக விளங்கியது.
- சட்டம், விஞ்ஞானம், மருத்துவம், கல்வி போன்ற துறைகளிலும் இலத்தீன் மொழி பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
- இது இலக்கிய மொழியாக ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு மேல் அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டது.
- இன்று உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தாய் மொழியாக இலத்தீன் விளங்கி வருகின்றது.
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரை திருச்சபையின் வழிபாட்டு மொழியாகவும், பெரிய குருமடங்களில் போதனை மொழியாகவும் இலத்தீன் மொழியே விளங்கி வருகின்றது.

v.

- உரோமர்களால் நிர்ணயிக்கப்பட்ட பொதுப்பாதைகள் பாலங்கள், அணைக்கட்டுகள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள், நீர்த்தேக்கங்கள் என்பன அவர்களின் சிறந்த கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டு.
- கிறிஸ்தவ பசிலிக்கா ஆலய அமைப்பு உரோமைய கட்டடக் கலையை அடியொற்றியது.
- கொன்ஸ்தாந்தி நோபிள் ஆலயம், கல்வாரி மலை ஆலயம் ஒலிவ மலை ஆரோபண ஆலயம், பெத்லகேம் கிறிஸ்து பிறப்பு ஆலயம் என்பன பசிலிக்கா அமைப்பைக் கொண்டது.
- உரோமைய கட்டடக்கலை "பசிலிக்கா" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. அது இருபக்கங்களையும் கொண்ட நீள் சதுரமான மண்டப வடிவில் அமைந்துள்ளது.

agaram.lk

2)

i. சமாரியா, கலிலேயா, யூதேயா

கலிலேயா

- பலஸ்தீனாவின் பலம் மிக்க சிறப்பான பகுதி.
- இது மேற்கு கலிலேயா கிழக்கு கலிலேயா என இரு பகுதிகள் உண்டு
- புதிய ஏற்பாட்டில் இது முக்கிய இடத்தை வகிக்கின்றது.

சமாரியா

- இது கலிலேயாவுக்கும், யூதேயாவிற்கும் இடையில் உள்ள மலைப் பகுதி.
- இஸ்ரேல் அரசு இரண்டாகப் பிரிந்ததன் பின்னர் மிகவும் வளர்ச்சியடைந்தது.
- இங்கு கெரிசிம் மலை உண்டு அதிலே சமாரியர்கள் தமக்கென ஒரு ஆலயத்தை அமைத்தனர்.

யூதேயா

- யூதர்களின் பிரதான குடியிருப்பு மையமாகும்.
- சமாரியாவிற்கு தென்பகுதியில் எகிப்து, சீனாய் பாலைவனத்திற்கு வடக்கில் உள்ளது.
- இது சிறிய சிறிய மலைகளைக் கொண்ட பிரதேசம்.
- யூதர்களின் ஆன்மீக, சமூக மையமான எருசலேம் இங்குதான் அமைந்துள்ளது.

ii. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

- இஸ்ராயல் இனத்தின் தந்தையர்களாக வழிகாட்டிகளாகக் செயற்பட்டனர்.
- இறைவனின் மீட்புத் திட்டனத்தின் முன்னோடிகளாகச் செயற்பட்ட தலைவர்கள்
- இறைவனுடன் உடன்படிக்கை செய்து அதற்கேற்ப இஸ்ராயல் மக்களை வழிநடாத்தினர்.
- இஸ்ராயல் இன உருவாக்கத்தில் அத்திவாரமானவர்கள்

iii. சமய, சமூக வாழ்வின் மையமாக இருந்த எருசலேம் ஆலயத்தை இழந்தமை.

- பலி செலுத்தமுடியாமல், இறைவனுடன் உறவை ஏற்படுத்த முடியாமை.
- சமய, சமூக, கலாச்சார வாழ்வில் பாரிய மாற்றங்களும் சீரழிவுகளும் ஏற்பட்டமை.
- சொந்த நாட்டை இழந்து அந்நிய நாடுகளில் வாழ்ந்தமை.

agaram.lk

iv. எஸ்ரா

- யூத மக்களை ஒன்று கூட்டி சட்டங்களை எடுத்துரைத்து அவற்றைக் கடைப்பிடிக்கும் வழக்கத்தை மீள ஏற்படுத்துதல்.
- ஞான வாழ்விலும், நன்நெறியிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல்.
- உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து யூதர்களை ஒழுக்கமுள்ள மக்களாக்க செயற்பட்டவர்.

நெகேமியா

- பல எதிப்புக்கள் மத்தியிலும் கி.மு 444ல் எருசலேம் நகரமதிலைக் கட்டியெழுப்பினார்.
- சமய – சமூக சீர்திருத்தங்களை இஸ்ராயல் மக்களிடையே செய்தார்.
- பாரசீக மன்னரால் யூத நாட்டிற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

v. பெரிய ஏரோதன்

அர்க்கெலா

பிலிப்பு

ஏரோது அந்திப்பா

1வது ஏரோது அகிரிப்பா

3)

i. அன்னா, கயபா

- ஆலயப் பணிகளின் முழுக்கண்காணிப்பும், விழாக்களின் போது ஆலயத்தின் அதி தூயகத்துள் சென்று சிறப்புச் சடங்குகளை நிறைவேற்றுபவர்கள்.
- யூதர்களின் நீதி வழங்கும் தலைமைச் சங்கத்திற்கு தலைமை தாங்குவர்.
- ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் காணிக்கைகளிலும் மிருக விற்பனையிலும் அவருக்கு பங்கு உண்டு.
- நாடு கடத்தலின் பின்னர் தலைமைக் குருக்களின் செல்வாக்கு அரசியலிலும், சமயத்திலும் மேலோங்கியுள்ளது.

ii. ஆலயத்தின் சுற்றளவு 2350 அடி ஆகும்.

- அகன்ற சுவர்களையும், பண்டங்களையும், நான்கு திசைகளில் நுழைவாயில்களையும் கொண்டது.
- “புற இனத்தார் முற்றம்” என்கிற அமைப்புக் காணப்படுகிறது.
- வடக்கே அரச மண்டபமும், கிழக்கே சாலமோன் மண்டபமும் அமைந்துள்ளது.
- பலிப்பீடத்தை அடுத்திருக்கும் உட்பகுதியே “திருத்தூயகம்” என்று அழைக்கப்படுகின்றது. இது திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கும்.
- ஆலயம் வெள்ளை சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டிருந்தது.

iii.

- தொழுகைக் கூடங்களில் செபவழிபாடுகள் நடத்தப்படுவதுடன் அவை மறைப்பாடசாலையாகவும், நீதி விசாரணை மன்றமாகவும் பயன்பட்டன.
- இத் தொழுகைக் கூடங்களில் இயேசுவும் கற்பித்து வந்துள்ளார் என்பதை நற்செய்திகளில் காணலாம்.
- தூய பவுல் அடிகளாரும் மறைத்தூதுப் பயணங்களில் இத்தொழுகைக் கூடங்களிலேயே கற்பித்து வந்துள்ளார்.
- மக்களுக்கு அறிவுரை கூற தொழுகைக் கூடத்தலைவர்கள் சிறந்த போதகர்களை அழைத்து வந்து மறை உரை ஆற்றச் செய்வர்.
- இயேசுவின் காலத்தில் 300 ற்கும் மேற்பட்ட தொழுகைக் கூடங்கள் காணப்பட்டது.
- இங்கே யூதர்கள் ஒன்று கூடி செபித்தும், இறைவார்த்தைகளை வாசித்தும், அதன் விளக்கங்களைக் கேட்டும் வந்தனர்.

iv. எருசலேமில் ஆலயத்தில் தலைமைச் சங்கம் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்படல் வேண்டும்.

- திருவிழா காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பகல்வேளையில் கூட்டப்படல் வேண்டும்.
- ஒரு யூதன் தம் மதத்திற்கு எதிராக குற்றம் இளைத்தால் அவனிற்கு நீதித் தீர்ப்பு வழங்குவதற்காக தலைமைச் சங்கம் கூட்டப்படலாம்.
- குற்றவாளியாக கருதப்பட்ட நபருக்கு எதிராக 2 சாட்சிகள் தனித்தனியே விசாரிக்கப்படல் வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு தீர்ப்பு வழங்க முடியாது.

agaram.lk

v. பலி செலுத்தப்பட்டது.

- பலி செலுத்துவதால் மனிதம் புனிதமடைவது என்பதற்கேற்ப யூதர்களின் வழிபாட்டில் இது முதன்மை பெற்றது.
- இது எரிபலி, நல்லுறவுப் பலி, பழிநீக்கும் பலி என காணப்பட்டது.

செபம்

- பலியிடுவதையும் அவர்கள் செபமாகக் கருதியதடன் யூதர்களின் அன்றாடச் செபமாக "ஷேமா" என்பது ஒப்புக் கொடுக்கப்பட்டது.
- யூதர்கள் பொதுவாக காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் செபித்து வந்தனர்.

நோன்பு

- பாவப் பரிகாரபலி விழாவின் போது ஒவ்வொரு யூதனும் உண்ணா நோன்பிருப்பார்.
- நோன்பின் போது சாக்குடை அணிந்து தலைக்கு எண்ணெய் தடவி, உடலில் சாம்பல் பூசியிருப்பர்.
- இயேசுவும் நாற்பது நாட்கள் நோன்பிலிருந்தார் தந்தையை நோக்கிச் செபித்தார்.

தரமம் செய்தல்.

- ஏழைகளும் தமது வருமானத்தில் இருந்து தர்மம் செய்தனர்.

## பகுதி II "ஆ"

4) அ) யாக்கோபின் பன்னிரு புதல்வர்களில் ஒருவரான யோசேப்பு எகிப்திலே ஆளுநனாக இருந்தபோது இஸ்ராயல் மக்கள் எகிப்துக்குச் சென்று கோசேன் எனும் வளமான பகுதியில் குடி ஏறினர்.

ஆரம்பத்தில் இஸ்ராயல் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தாலும் இரண்டாம் இராம்சேசு எனும் பார்வோன் மன்னன் ஆட்சி செய்தபோது இஸ்ராயல் மக்கள் அடிமைத்தன வாழ்வை அனுபவித்தனர்.

இஸ்ராயல் மக்களின் தொகை அதிகரிப்பதையும் அவர்களின் ஆள்பலத்தையும் கண்டு அஞ்சியதோடு அவர்களுக்கு எதிராக கொடூரமான இன அழிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார்.

கடுமையான வேலைகள் செய்ய பணிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.

கடினமான சாந்து, செங்கல் வேலையாலும், வயல்வேலைகளாலும் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இறைபாராமரிப்பின் மூலம் மோசே, ஆரோன் தலைமையில் வெளியேறினர்.

மோசே தலைமையில் வெளியேறிய இஸ்ராயலர் செங்கடலை கடந்து சீனாய் மலையில் யாவே இறைவனுடன் உடன் படிக்கை செய்து கொண்டனர்.

இறைபிரசன்னம், உடனிருப்பின் மூலம் அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்பட்டதை உறுதியாக நம்பினார்கள்.

ஆ) இயேசுவின் இவ்வுலகில் நற்செய்திப் பயணத்திலே உரிமை வாழ்விழந்து ஒடுக்கப்படுகின்ற அடிமைத் தனங்களிலே வாழ்வோரை மீட்பதற்காக நான் வந்தேன் என கூறுகின்றார்.

இஸ்ராயல் மக்கள் இறைவனால் மீட்புத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட இனம். அதற்காக காலத்திற்கு காலம் பல்வேறு தலைவர்களால் அவர்களை வழிநடாத்துகின்றார். பல்வேறு பட்ட இறை பராமரிப்புக்களை வழங்குகின்றார். மேலும் எகிப்திலே அவர்கள் கொடுங்கோல் ஆட்சியில் நசுக்கப்பட்ட போது அவர்களை

agaram.lk

மீட்டெடுத்து உடன்படிக்கை செய்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் செல்கின்றார்.

இன்றைய உலகிலே சமூகங்களால், நாடுகளால் அரசியல், மற்றும் பொருளதாரச் சுரண்டல்களுக்காக அதிகாரம் கொண்டு ஆண்டு வரும் சமூகங்களும், நாடுகளும், தலைவர்களும் எம்கண்முன்னே உண்டு.

இஸ்ராயல் மக்களுக்கு நேர்ந்த அவல வாழ்வு அடிமைத்தள வாழ்வு ஏறக்குறைய 430 ஆண்டுகள் வரை நீடித்தது. எனவேவ அதுவரை அவர்களது பொறுமை தியாகம், இறைநம்பிக்கை என்பவற்றைக் கடைப்பிடித்தல். இன்றைய அடிமைத்தனத்தால் உரிமை வாழ்விழந்த மக்களுக்கு முன்னுதாரணங்கள்.

எகிப்திலே ஆண்குழந்தைகள் கொல்லப்பட்டு இனப்படுகொலை நடைபெற்ற போது அவ்வினத்தை அழிந்து போக இறைவன் விட்டுவிடவில்லை.

நீண்டகாலத் துன்புறுத்தல்களின் போது அத்துன்புறுதத்தல் மத்தியில் இருந்து மேசே என்னும் தலைவனை தெரிவு செய்து விடுதலையை பெற்றுக் கொடுத்தார்.

வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கொடுத்து சுதந்திர மக்களாகியது போல இன்றைய உலகின் ஏதிலிகளுக்கும் உரிமையுடைய தேசத்தை வழங்குவார் என்ற செய்திகள் தரப்படுகின்றது.

- இன்றைய உலகிலே எத்தகைய உரிமைகளை இழந்தாலும் இறை விசுவாசத்திலே வாழவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.
- மக்களின் தலைவர்கள் இறையருளுடன் நீதி, நேர்மை துணிவுடன் மக்களை வழிநடத்துதல். (மாணவர் விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

5) அ) பாஸ்காத் திருவிழா
பெந்தக்கோஸ்தே விழா
கூடாரத்திருவிழா
ஆலய அர்ப்பண விழா

agaram.lk

பாஸ்கா விழா

- கடத்தல் விழா என்றும், புளியாத அப்ப விழா என்றும் அழைக்கப்பட்ட இப்பாஸ்காவிழாவே யூதர்களின் திருவிழாக்களில் முதன்மையானது ஆகும்.
- இது விடுதலைப் பயணத்திற்கு முன்னர் வழக்கத்திலிருந்தாலும் அதற்குப் பின்னரே தனித்துவமும் முக்கியத்துவம் பெற்றது.
- எகிப்திய அடிமைதன விடுதலையையும் தமது மூதாதையருக்கு கிடைத்த இறைவனின் பராமரிப்பையும் நினைவு கூர்ந்து கொண்டாடி வந்தனர்.

பெந்தக்கோஸ்தே விழா

- வாரங்களின் விழா, ஐம்பதாம் நாள் விழா, முதற்கனி விழா என அழைக்கப்படும் இவ்விழா யூதவிழாக்களில் பாஸ்கா விழாவிற்கு அடுத்ததாக சிறப்பு பெற்றது.
- பாஸ்கா விழாவின் பின் ஏழு வாராங்கள் முடிந்த மறுநாள் (ஐம்பதாம் நாள்) கொண்டாடப்படும் இவ்விழா யூதர்களின் விளைநிலங்களின் பயனையும், மந்தைகளின் தலையிற்றையும் காஔிக்கையாக்கி பலிசெலுத்தும் நன்றி விழாவாக அமைந்துள்ளது.

- இவ்விழா விடுதலைப் பயணத்தின் பின் சீனாய் உடன்படிக்கையின் நினைவாகவும் அமைந்தன.

ஆ) பாஸ்கா விழா

பெந்தக் கோஸ்தே விழா

யூதர்களால் கொண்டாடப்பட்டு வந்த மிகப்பழமை வாய்ந்த மேற்படி இரண்டு விழாக்களும் இன்று கொண்டாடாப்படுகின்றது.

பாஸ்கா என்பது புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவின் உயிரிப்பு விழாவாக் கொண்டாடப்படுகின்றது. மேலும் பெந்தக்கோஸ்தே விழா திருச்சபையின் பிறந்த நாளாக தூய ஆவியின் விழாவாக இன்றும் கொண்டாடப்பட்டுவருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

40 நாட்கள் நோன்பிருந்து உயிர்பு விழா மகிழ்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தூய ஆவியின் விழா இரவிலே விழித்திருந்து வழிபாட்டில் ஈடுபடுதல்.

(மாணவர் விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

6)

i. இறைவனே தங்களை ஒரு இனமாக வாழவைத்தார் என்ற இஸ்ரேயல் மக்களின் நம்பிக்கையில் தோன்றிய நட்புறவு வாழ்க்கையே இறையாட்சியாகும்.

- உடன்படிக்கை வாழ்வாகிய இறையாட்சியை யூதர்கள் எதிர்பார்த்து இருந்தாலும் இறையாட்சியின் மக்களாக வாழ்வதில் அவர்கள் மத்தியில் பல குறைகளும் முரண்பாடுகளும் காணப்பட்டது.
- அவர்களிடையே காணப்பட்ட சமூக வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வுகள் இறுக்கமான சட்டங்களால் ஏற்பட்ட விளைவுகள் இறையாட்சிக்கு முரணாக அமைந்தன.
- யூத மரபில் இருந்து உதித்த இயேசுவின் நம்பிக்கை போதனை வாழ்வு செயல் உயிரித்தியாகம் அனைத்தும் இறையாட்சிக்காகவே இயேசு மண்ணுலகில் மூட்ட வந்த தீயே இறையாட்சி ஆகும்.
- இயேசுவின் பார்வையில் இறையாட்சி என்பது ஒரு மாற்று சமூகமாகும். இறைவனின் பண்புகளாகிய அன்பு, உண்மை, நீதியை வாழும் ஒரு சமூகமாகும். எனவே இறைவனையே அரசாகக் கொண்ட ஒரு சமத்துவ, சகோதரத்துவ வாழ்க்கை முறையை உருவாக்க யேசு முயன்றார்.

ii. மக்காரியோ என்ற கிரேக்க சொல்லின் பொருள் பேறுகள் ஆகும்.

பேறு பெற்றோர் என்றால் இறை அருள் பெற்றவர் / இறைவனுக்கு ஏற்புடையவர் ஆவார் என்பது பொருளாகும்.

- பேறுபெற்றோர் என்னும் நிலையை அடைவதற்கு இறை பண்புகளை நன்மை தனங்களை ஏழை எழியோர், துன்புறுவோர், நோயாளர், புறக்கணிக்கப்பட்டோர் ஆகியோருடன் உண்மையான மனதுடன் வாழவேண்டும் என்பது இயேசுவின் படிப்பினையாகும்.
- நாம் இறையாட்சிக்கு தகுதிபெற வேண்டும் எனின் ஏழையரின் உள்ளத்தவராய் கனிவுடைவோராய் நீதி நேர்மையுடையோராய், இரக்கமுடையோராய், தூய உள்ளத்தவராய் இருக்க வேண்டும் என்று இயேசு எடுத்துரைக்கிறார்.
- எட்டுப் பேறுகளின் முதல் மூன்றும் ஒருவர் இறைவனோடு கொண்டிருக்க வேண்டி உறவின் மனதினையையும் அடுத்த மூன்றும் ஒருவர் மற்றவரோடு கொண்டிருக்க வேண்டிய உறவின் தன்மைகளையும், கடைசி இரண்டும் இறைவனோடும் மனிதரோடும் கொண்டுள்ள உறவில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க, நீதி நெறிகளையும் விளக்குகின்றன.

agaram.lk

இன்றைய சமுதாயத்தில் காணப்படும் ஒழுக்கக்கேடுகள் அநீதிகள் நேர்மையினங்கள், மனித மாண்புகள் மதிக்கப்படாமை என்பவற்றக்கு மத்தியில் இப்பேறுகளை கடைப்பிடித்து இறை மனித உறவுகளை கட்டியெழுப்பி உண்மை, நீதி, சமத்துவம், பேணி புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆனால் இன்றும் இன, மொழி வேறுபாடுகள், சிறைகளிலே குற்றமின்றியும் வாழும் நிலை, தனிமனித உரிமைகள் மறுக்கப்படுதல், உண்மைகள் மறைக்கப்படுதல், படுகொலைகள், ஆள் கடத்தல்கள், மற்றும் திட்டமிட்ட சமுதாயச் சீர்குலைவுகள் மலிந்துள்ள நிலையில் இவ் எட்டுப் பேறுகளின் படி ஒவ்வொருவரும் வாழ்வதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். மேலும் இறையரசின் மதிப்பீடுகளை ஒவ்வொருவனும் கடைப்பிடித்து வாழும் போது அவை சமூகத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

(மாணவர் விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

7)

i. கடுகு விதை உவமை
புதையல் உவமை
முத்து உவமை
புளிப்பு மாவு
வலை உவமை

கடுகு விதை உவமை

- மிக சிறிய விதையாகிய கடுகுவிதை 12 அடி உயரமுள்ள ஒரு பெரிய செடியாக வானத்து பறவைகள் தற்குமளவிற்று பெரிய மரமாக வளரும். இந் நிகழ்வை உவனமாக்கி இயேசு இறையாட்சியின் தன்மையை விளக்குகிறார்.
- இயேசுவின் செயல்களால் பெருமளவான மக்கள் அவரை பின்பற்றுவார்கள் என எண்ணிய சீடர்கள் அது நிறைவேறுததால் காலப்போக்கில் அவரில் நம்பிக்கை இழந்தார்கள்.

புளிப்பு மாவு

- இயேசுவின் செயல்களையும், மக்கள் மத்தியில் அவருக்கிருந்த நன்மதிப்பையும் கொண்டு அவரே எதிர்பார்க்கப்பட்ட ஆட்சியை அமைப்பார் என நம்பினார்.
- இயேசு இறையாட்சியின் நன்மையை புளிப்பு மாவுக்கு ஒப்பிடுகிறார்.

agaram.lk

ii. தீய ஆவிகளை விரட்டுதல்
இயற்கை தொடர்பான புதுமைகள்
குணமளித்தல்
இறந்தவர்களை உயிர்ப்பித்தல்

திருத்தூதர்களை இயேசு தெரிந்தெடுத்து அவர்களுக்கு சில அதிகாரங்களைக் கொடுத்தல். அதிலும் சிறப்பாக குணமளித்தல், தீய ஆவிகளை விரட்டுதல் என்பவற்றினை திருத்தூதர்களும் நிறைவேற்றி வந்தனர்.

திருத்தூதர்களின் வழிவந்த திருச்சபைப்பணியாளர்களும் இயேசுவின் துணையுடன் மேற்படி குணமளித்தல் மற்றும் தீய ஆவிகைள விரட்டுதல், போன்றவற்றினை நிறைவேற்றி வருகின்றன.
தியான இல்லங்கள், குணமாக்கும் நிலையங்கள் உருவாக்கம் பெற்று திருச்சபையின் அனுமதியுடன் செயற்படுகின்றனர். திருச்சபை பணியாளர்களில் பொது நிலையினரும் மேற்படி பணிகளை செய்து வருகின்றனர்.
குருக்கள், துறவிகள் தம்மை செப, தப வாழ்விற்கு முழுமையாக அர்ப்பணித்து இன்றும் இத்தகைய பணிகள் எம்மத்தியில் நிறைவேற்றப்படுகின்றது.
செப, தப தியானங்கள் மற்றும் இறைவழிபாடுகள் மூலம் தனி குழுவாக மேற்கொள்ளப்படுகின்றது.

(மாணவர் விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)